Bharatiya Vidya Bhavan BULLETIN

VOLUME XXXI No. 04 COIMBATORE KENDRA MAY 2022

**Dear reader,**

This month's personality is Shri.Rabindranath Tagore – the Nobel prize winner. There are also articles on Sri Gopala Krishna Gokale – Social reformer, Bachendri Pal – first Indian Woman to conquer Mt.Everest. In the tamil section we have articles on Sadguru Saint Thyagaraja, Gandhian Avinashilingam Chettiar and on other subjects. We have also reports of the events and happenings at our schools.

Wish you happy reading!

The editorial board

## PERSONALITY OF THE MONTH
# NOBEL LAUREATE - RABINDRANATH TAGORE



*Rabindranath Tagore*

Rabindranath Tagore, was born on May 7, 1861, in Calcutta and died on August 7, 1941. He was a Bengali poet, short-story writer, song composer, playwright, essayist, and painter who introduced new prose and verse forms and the use of colloquial language into Bengali literature, thereby freeing it from traditional models based on classical Sanskrit. He was highly influential in introducing Indian culture to the West and vice versa, and he is generally regarded as the outstanding creative artist of early 20th-century India. In 1913 he became the first non-European to receive the Nobel Prize for Literature.

The son of the religious reformer Debendranath Tagore, he early began to write verses, and, after incomplete studies in England in the late 1870s, he returned to India. He published several books of poetry in the 1880s and completed Manasi (1890), a collection that marks the maturing of his genius. It contains some of his best-known poems, including many in verse forms new to Bengali, as well as some social and political satire that was critical of his fellow Bengalis.

In 1891 Tagore went to East Bengal (now in Bangladesh) to manage his family's estates at Shilaidah and Shazadpur for 10 years. There he often stayed in a houseboat on the Padma River (the main channel of the Ganges River), in close contact with village folk, and his sympathy for them became the keynote of much of his later writing. Most of his finest short stories, which examine “humble lives and their small miseries,” date from the 1890s and have a poignancy, laced with gentle irony, that is unique to him. Tagore came to love the Bengali countryside, most of all the Padma River, an often-repeated image in his verse. During these years he published several poetry collections, notably Sonar Tari (1894; The Golden Boat), and plays, notably Chitrangada (1892; Chitra). Tagore's poems are virtually untranslatable, as are his more than 2,000 songs, which achieved considerable popularity among all classes of Bengali society.

In 1901 Tagore founded an experimental school in rural West Bengal at Shantiniketan (“Abode of Peace”), where he sought to blend the best in the Indian and Western traditions. He settled permanently at the school, which became Visva-Bharati University in 1921. Years of sadness arising

> You can't cross the sea merely by standing and staring at the water.
>
> \- *Rabindranath Tagore*

from the deaths of his wife and two children between 1902 and 1907 are reflected in his later poetry, which was introduced to the West in Gitanjali (Song Offerings) (1912). This book, containing Tagore's English prose translations of religious poems from several of his Bengali verse collections, including Gitanjali (1910), was hailed by W.B. Yeats and André Gide and won him the Nobel Prize in 1913. Tagore was awarded a knighthood in 1915, but he repudiated it in 1919 as a protest against the Amritsar (Jallianwalla Bagh) Massacre.

From 1912 Tagore spent long periods out of India, lecturing and reading from his work in Europe, the Americas, and East Asia and becoming an eloquent spokesperson for the cause of Indian independence. Tagore's novels in Bengali are less well known than his poems and short stories. In the late 1920s, when he was in his 60s, Tagore took up painting and produced works that won him a place among India's foremost contemporary artists.

*https://www.britannica.com*

## MOTILAL NEHRU
### *Pioneer in forming the Indian National Congress*



Motilal Nehru was one of the key figures of Indian politics and made his contribution in the formation of Indian National Congress.

Motilal Nehru was one of the key figures of Indian politics and also in the history of the Indian National Congress. He was born on May 6, 1861 in Agra, Uttar Pradesh. He was a lawyer by profession and served as the President of Congress twice. An important figure in the Indian freedom struggle, he was the father of India's first Prime Minister Jawahar Lal Nehru and grandfather of Indira Gandhi, the first woman PM of India.

He was born on May 6, 1861 to Gangadhar Nehru, who died three months prior to his birth. His father was a Kotwal in Delhi during Bahadur Shah Zafar's rule but when the Revolution of 1957 took place, he left Delhi and moved to Agra where Motilal was born.

Motilal had two elder brothers, Bansidhar and Nandlal Nehru, the latter was the Diwan of Khetri in Rajasthan and had taken care of Motilal as his own heir, financing his education by sending him to the University of Cambridge where he graduated with a Law degree and became one of the first Indians to get 'Western education'

He started his career by practicing as a lawyer in Kanpur and later moving to Allahabad

In 1900, he purchased a huge mansion in Civil Lines in Allahabad and named it Anand Bhavan. It was later turned into a museum when Indira Gandhi handed it over to the Indian government. The museum displays everything about the Nehru-Gandhi family

He reached the peak of his law career in 1909, when he gained the approval of appearing in the Privy Council of Great Britain

He became the President of the Indian National Congress (INC) in 1919 from Amritsar and the second time in Calcutta in 1928

He was arrested in 1922 during the Non-Cooperation Movement

He formed the Swaraj Party with Deshbandhu Chittaranjan Das and was also elected to the United Provinces Legislative Council of British India in New Delhi and became the leader of the opposition

His son entered the political arena in 1916 and became highly active in it. He finally handed over the Presidency to his son Jawahar Lal Nehru

Motilal Nehru College of Delhi University is named after him

Motilal Nehru was very fond of Mahatma Gandhi under whose advice he gave up his lavish life style and started wearing khadi.

Due to the deterioration of his health, he passed away on Febuary 6, 1931.

The highest education is that which does not merely give us information but makes our life in harmony with all existence. *- Rabindranath Tagore*

# GOPAL KRISHNA GOKHALE
## *Social Reformer and Political Guru of Mahatma Gandhi*



Gopal Krishna Gokhale was a great social reformer and educationist who provided exemplary leadership to India's freedom movement. Gopal Krishna Gokhale was born on 9 May 1866 in Kotluk village in present-day Maharashtra (then part of the Bombay Presidency) in a Brahmin family. Gokhale worked towards social empowerment, expansion of education, struggle for freedom in India for three decades and rejected the use of reactionary or revolutionary ways.

Between 1899 and 1902, he was a member of the Bombay Legislative Council followed by work at the Imperial Legislative Council from 1902 till his death in 1915. At the Imperial legislature, Gokhale played a key role in framing the Morley-Minto reforms of 1909.

He was associated with the Moderate Group of Indian National Congress, which he joined in 1889. He became president of INC in 1905 in Banaras session. This was the time when bitter differences had arisen between his group of 'Moderates' and the 'Extremists' led by Lala Lajpat Rai and Bal Gangadhar Tilak among others. The two factions split at the Surat session of 1907. Despite the ideological difference, in 1907, he intensely campaigned for the release of Lala Lajpat Rai, who was imprisoned that year by the British at Mandalay in present-day Myanmar.

He established the Servants of India Society in 1905 for the expansion of Indian education. He was also associated with the Sarvajanik sabha journal started by Govind Ranade. In 1908, Gokhale founded the Ranade Institute of Economics. He started English weekly newspaper, The Hitavada (The people's paper).

As a liberal nationalist, he is regarded by Mahatma Gandhi as his political guru. Gandhi wrote a book in Gujarati dedicated to the leader titled 'Dharmatma Gokhale'.

# BACHENDRI PAL – ON TOP OF THE WORLD
## *Bachendri Pal Became 1st Indian Woman To Conquer Everest 38 Years Ago on May 22*



Bachendri Pal became India's first woman mountaineer to conquer Mt Everest on May 23, 1984. She has been awarded with Padma Shri, Arjuna Award, and many more.

On May 23, 1984, Bachendri Pal created history by reaching the height of world's highest mountain peak, Mount Everest. She also made India proud by becoming first woman mountaineer to reach the peak a day before turning thirteen. Pal accomplished her dreams at a time when women were not encouraged to participate in sports and in fact, her family had also raised objections against her decision.

At a very young age of 12, she and her friends climbed a 13,123 feet high peak during a school picnic. Pal attended Nehru institute of Mountaineering where she scaled Mt Gangotri and Mt Rudragaria. Due to her extraordinary skills in mountaineering, she secured a job as an instructor at training school for women operated by the National Adventure Foundation. Pal was one of the members among eleven men and six women mountaineers who were selected for expedition to Mount Everest in 1984.

Born in a Bhotiya family in Nakuri village in Uttarakhand's Uttarkashi district, Bachendri Pal's father Kishan Singh Pal was a tradesman working as groceries supplier to Tibet from India. Pal's family members raised questions when she decided to leave her teaching career and pursue mountaineering, but her determination and focus on her dreams did not let her quit the climb. When an avalanche had buried their camp during their adventure and all her team members decided to return but she continued her endeavour and was joined by Ang Dorjee and some other mountaineers on May 22, 1984.

Bachendri Pal was awarded Padma Shri in 1984, Arjuna Award in 1986, National Adventure Award in 1994, and Padma Bhushan recently in 2019. She has also published her autobiography- "Everest- My journey to the Top" through National Book Trust, Delhi. In March 2021 she had announced she will lead a 10-member team of women aged above 50 in a five-month-long expedition from eastern to western Himalaya beginning in May, however, due to current pandemic the program has been rescheduled.

Faith is the bird that feels the light when the dawn is still dark.

*- Rabindranath Tagore*

# EVENTS & HAPPENINGS AT COIMBATORE KENDRA

## DISCOURSE BY H H SWAMI PARAMARTHANANDA

Arsha Vidya Gurukulam and Bharatiya Vidya Bhavan conducted talks on Uddhava Gita – Chapter 5 by H H Swami Paramarthananda at Bhavan's auditorium from 24th April to 30th April 2022. There was a very good response from the public for his talks. In the morning he gave talks on Advaita Makaranta, which is an advanced Prakarana Grantha composed in the 15th Century by Lakshmidara Kavi. It consists of 28 verses and establishes the oneness of Jivatma and Brahmam. The name refers to the honey of Advaita that dips from the verses.

Swami Paramarthananda gave talks on Uddhava Gita chapter 5 in the evening. Uddhava Gita is an extraordinary teaching by Lord Krishna to Uddhava, who is a good friend of Krishna and a staunch devotee too. The self-destruction of Yadava clan leaves Uddhava shaken. And Lord Krishna pacifies him and introduces him to the highest philosophic concepts.




*Shri. N.V.Nagasubramaniam, Vice Chairman, Cbe Kendra honouring Swamiji*



*Shri.V.Prabhakar Rao, Registrar, Cbe Kendra honouring Swamiji with a garland.*



*Attentive audience listening to the Swamiji*




*H H Swami Paramarthananda giving his talks*

## FORTHCOMING EVENT – COIMBATORE KENDRA

பவனில் நடைபெறவுள்ள சங்கீத உபன்யாசத் தொடர்ச் சொற்பொழிவுக்குத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கலைமாமணி ஸ்ரீமதி. **விசாகா ஹரி** அவர்கள்

**“ஸ்ரீமத் நாராயணீயம்”**

என்ற தலைப்பில் சங்கீத உபன்யாசம் நிகழ்த்த உள்ளார்கள்.

நாள் : 24.06.2022 வெள்ளி முதல் 26.06.2022 ஞாயிறு வரை
நேரம் : மாலை 06.00 முதல் 08.00 வரை
இடம் : பவன் வளாகம், 582, டி.பி. சாலை, ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர்

## LAUDABLE STUDENT LEADERS

***"Optimism is the faith that leads to achievement."***





The Award function to acknowledge and commend the student leaders for their character, perseverance and diligence in upholding the spirit of Bhavan of both the schools of Coimbatore Kendra was held on 18.04.2022 at BVB, R.S Puram School with full zest and spirit. The delegates included the Chairman Shri. B.K Krishnaraj Vanavarayar, the Treasurer Shri. M. Alagiri Swamy, the Registrar Shri. V. Prabhakar Rao, the Joint Secretary Shri. C R Suriyanarayanan, the Principals Shri. R.G Shankar and Smt. D Maheswari.

The program commenced with the rendering of Prayer song by the school choir. It was a mystical experience. The welcome address was delivered by the Principal of RSPuram school Shri. R.G Shankar. He quoted DR. A.P.J Abdul Kalam in his speech and quoted a few Thirrukural couplets to vitalise the environment. Then, the students of class XII shared their earnest feelings about the school and the aura provided by Bhavan for their overall blooming. They also emphasised on the importance of Human Excellence in their character building.

The Presidential address was given by the Chairman Shri. B.K Krishnaraj Vanavarayar. He stimulated the students to believe in 3 C's- Character, Culture and Country. He also apprised the students to make this country an ideal nation with their service and sacrifice.

Then, the awards were distributed for the C Subramanian Award, Shri Pranlal Nanjee Devkaran Award, SPL, ASPL, JSPL, Sports Captain, All Rounder Award and Swami Vivekananda Award for Excellence. The recipients were commended by the audience for their leadership skills, dedication and diligence. The vote of thanks was proposed by the Principal of Bhavan's Ajjanur school Smt. D. Maheshwari. She expressed her gratitude towards the members of the Management for their continuous support and allegiance towards the school. The program ended with Bhavan's anthem followed by the National Anthem.

# BHAVAN'S PUBLIC SCHOOL (CBSE) ACTIVITIES

## COMMENCEMENT OF CLASSES

Bharatiya Vidya Bhavan Public School had a grand opening of the academic year 2022-23 in its campus on 06.04.2022. The campus was well decorated to welcome its first parents and students. Swami Vivekananda statue installed at the entrance of the CBSE School caught the attention of every parent and they offered flowers while entering and spoke high of the principles of Swami Vivekananda which will be followed. The traditional lamp was lit by student representatives of different classes. The function was presided by the Chairman Dr.B.K.KrishnarajVanavarayar. Management committee members -the Correspondent Shri.M.Alagirisamy, the Joint SecretaryShri. C.R. Suryanarayan, the Registrar Shri. V. Prabhakar Rao and Shri. Raveendran were also present for the function.

In the august presence of the dignitaries, the Principal of BVB Public School Smt. C. Jayalatha welcomed the gathering.

In the presidential address, the Chairman Dr B. K. Krishnaraj Vanavarayar, said that education at Bhavan is Modern in outlook, yet firmly rooted in tradition. By empowering the youth, the society can be enriched. He insisted on the importance of serving

> Every child comes with the message that God is not yet discouraged of man.
>
> *- Rabindranath Tagore*

the society that we live in, which will be inculcated in every child of Bharatiya Vidya Bhavan.

The parent representatives expressed the reason why they chose Bharatiya Vidya Bhavan Public School for their child.

A book on 'Education' by Swami Vivekananda and another book 'Bhavan's at a Glance' was given to every parent. The parents went around the campus and appreciated the infrastructure available. The programme ended with National Anthem.














## TALENT HUNT

The 'Talent Hunt' took place on 22 April, 2022, where students of grade I – VI exhibited various skills from dance to playing musical instruments, and speeches to fireless cooking and many more. This provided a platform for the students to exhibit their talents. Each participant had three minutes to showcase their innate talents. Events like these not only help the participating students to show their abilities but also motivate other students to come forward confidently and show their hidden potential. Students enjoyed watching their friends' talents and encouraged them.



Don't limit a child to your own learning, for he was born in another time.

*- Rabindranath Tagore*

# EVENTS & HAPPENINGS AT RSPURAM SCHOOL

## LIGHTING CEREMONY





The Lighting Ceremony was celebrated with full certitude and allegiance at BVB, R.S Puram School. The delegation included the Chief guest of the day Smt.Geetha Gopinath (Former Principal, SBOA School), members of the Management and the Principal. The program commenced with the recitation of Prayer song sung by the school choir. It cast a spell on the whole audience. The welcome address was delivered by Shreya of class XI. Subsequently, the mother lamp was kindled to stimulate the skill of wisdom, service and sacrifice in the aspirants of class X and XII towards the society. The students of both X and XII standard pledged to strive harder for all the upcoming challenges in life. Students of class X and XII shared their earnest feelings in the form of Reflections. They were feeling indebted towards the school management, the Principal and the teachers. All of them cherished the moments they had during 14 years of education in the school. A dynamic Bharatnatyam Dance performance was presented by the students of class XII. It was an ethereal experience. The chief guest of the day in her address, vitalized the children by invoking the zeal to accomplish one's dreams through diligence. The Registrar Shri. V Prabhakar Rao addressed the gathering. He apprised the students to realise their own potential and exhibit the worthwhile results. The Joint Secretary Shri. C R Suriya Narayanan conveyed his best wishes to the aspirants of class X and XII. The Principal Shri. R.G Shankar thanked all the delegates on the dais for their words of sagacity. The vote of thanks was delivered by Kashish of class XI.

# EVENTS & HAPPENINGS AT AJJANUR SCHOOL

## HUMANITIES DAY CELEBRATION

"The calling of the humanities is to make us truly human in the best sense of the world."

Bharatiya Vidya Bhavan celebrated the "Humanities day" to honour the study of Humanities on 1 April 2022. The celebration started with a prayer which was followed by the Patriotic songs and English speech that signified the importance of fundamental rights and duties.

The speech delivered by the Joint Secretary highlighted the duties and rights of a citizen. The Registrar in his address, emphasized on "Dharma" and its implementation in various aspects of life, with examples from Ramayana. Later the exhibition was inaugurated by the Chief guests.



The program was made colourful by cultural events, fancy dress competition and talent show.

Music fills the infinite between two souls.

*- Rabindranath Tagore*

## LIGHTING CEREMONY



"A lamp does not speak, it introduces itself through its light. Achievers never expose themselves but their achievements expose them."

The lighting ceremony was held on 6th April 2022 for the students of classes 10, 11 and 12 std. The dignitaries on the dais lighted the lamp and inaugurated the ceremony.

The Registrar, Joint secretary and the Principal along with the teachers, lit the lamp of 360 students which symbolizes wisdom, knowledge and compassion followed by recitation of oath, pledging themselves to uphold the duties, administered by Ms. Manju.

The Registrar, Sri.Prabakar Rao gave a motivational speech and gave 5 useful tips to achieve in life. He advised the students to be an achiever, keep growing, be ethical, care for people and have Trust in God.

He also shared his life experience and concluded his address with a parable of a pencil. The Joint Secretary, Shri.Suryanarayan addressed the gathering with his motivational words and wished the students for their board examination.

At the end of the program, students of classes X, XI and XII std shared their experience which they had in school.

## RAJYA PURASKAR GOVERNOR AWARD TEST CAMP



**"The sport in scouting is to find the good in every boy/ girl and develop it".**

Rajya puraskar Governor Award test camp was conducted at CCMA Govt. Girls. Hr. Sec. School, Raja Street, Coimbatore on 24 April 2022.

10 Guides and 17 Scouts participated in the camp accompanied by the Guide captain Ms. Jayanthi Rajendiran and Scout master Mr. Isaac. The main purpose of scouts and Guides was to build up good discipline and character among the students.

The camp started at 9:15 am with a prayer. The students were divided into groups in order to attend an oral test & written test. Mr. Diravia kani from Coonoor was the external examiner. After the practical test, the camp concluded at 5:30pm.

## VISIT TO NEYAM - THE OLD AGE HOME

On 29 April 2022, as a part of H.E activity, 26 students of Vivekananda Forum and two teachers visited 'NEYAM' - the old age home at Vadavalli, Coimbatore.

It was an amazing experience for the students as well as the teachers. The students also got an opportunity to offer some items like Rice, Wheat, Dal etc., and few clothes were also donated to them.

Students engaged them with some devotional songs and got their blessings. Family values are the roots of the next generation.



Let us not pray to be sheltered from dangers but to be fearless when facing them.

*- Rabindranath Tagore*

# கர்நாடக இசை மேதை – சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்



தியாகப் பிரம்மம் என்று பேற்றப்படும் கர்நாடக இசை மேதை சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பிறந்த தினம் மே 4 அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து: திருவாரூரில் (1767) பிறந்தார். இவர் பிறந்த சிறிது காலத்தில் குடும்பம் திருவையாறில் குடியேறியது. தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளை தந்தையும், பக்திப் பாடல்களை தாயும் இவருக்கு கற்றுக் கொடுத்தனர். சொண்டி வெங்கடரமணய்யாவிடம் கர்நாடக இசை கற்றார். எட்டு வயது முதலே சீதா ராமர் லட்சுமணர் அனுமன் விக்ரகங்களுக்கு அன்றாடம் பூஜை செய்வார். அப்போது தெலுங்கு சமஸ்கிருதத்தில் ராமன் மீது புதிய கீர்த்தனைகளை இயற்றி அவரே ராகமும் அமைத்துப் பாடுவார். தனது தாத்தா வைத்திருந்த பல இசை நூல்களைப் படித்தார்.

அதில் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள ஸ்ரீராமகிருஷ்ணானந்தா சுவாமிகளிடம் சென்றார். அவர் இவருக்கு நாரத உபாசனை மந்திரத்தை உபதேசித்தார். பக்தியுடன் அதை உச்சரித்து வந்த இவருக்கு நாரத முனிவரே காட்சி கொடுத்து சங்கீத ஸ்வர ரகசியங்கள் அடங்கிய ஸ்வரார்ணவம் என்ற அரிய நூலை வழங்கியதாக நம்பப்படுகிறது.

ராம நாம மந்திரத்தை 96 கோடி முறை ஜெபிக்குமாறு யதீந்திரர் என்ற மகான் கூற 21 ஆண்டுகளில் அதை செய்து முடித்த தியாகராஜர் பலமுறை ராமனின் தரிசனம் பெற்றதாக கூறப்படுகிறது. கீர்த்தனைகள் இயற்றுவது அவற்றுக்கு இசையமைத்து பாடுவது வேத பாராயணம் செய்வது புராணங்கள் கற்பது இசையை மற்றவர்களுக்கு கற்றுத் தருவது என்று வாழ்க்கையை ஓட்டினார். பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்று ஆங்காங்கே பல கீர்த்தனைகளை இயற்றினார். நன்றாக பாடுவதோடு வீணையும் நன்கு வாசிப்பார். கின்னரீ என்ற தந்தி வாத்தியம் வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார். 2400 பாடல்களை இயற்றியுள்ளார். 24 ஆயிரம் பாடல்களை இயற்றியதாகவும் ஒரு கருத்து உண்டு. பிரகலாத பக்தி விஜயம் நௌகா சரித்திரம் முதலிய இசை நாடகங்களையும் எழுதியுள்ளார். ஜோதிடம் கணிதத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார். இந்திய இசை வரலாற்றில் வேறு யாருக்கும் இல்லாத அளவுக்கு ஏராளமான சீடர்கள் இவரிடம் சேர்ந்தனர். தஞ்சாவூர் ராமாராவ் வீணை குப்பய்யர் உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர் உள்ளிட்டோர் குறிப்பிடத்தக்கவர்கள். சீடர்களுக்கு கர்நாடக இசையுடன் கணிதம் ஜோதிட சாஸ்திரமும் கற்றுக்கொடுத்தார். இவரது இசைத் திறமை குறித்து கேள்விப்பட்ட சரபோஜி மன்னர் தன் அரசவைக்கு வந்து தன்னைப் புகழ்ந்து பாடச் சொன்னார். ராம பக்தியில் திளைத்திருந்த இவரோ மனிதரை துதி செய்து பாடமாட்டேன் என்று மறுத்துவிட்டார். இவரைப் பற்றி ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன. 1935-ல் ராமசாமி பாகவதர் எழுதிய 'ஸ்ரீ தியாக ப்ரம்மோபநிஷத்' என்ற முதல் நூல் குறிப்பிடத்தக்கது.

தியாகப் பிரம்மம் என்று போற்றப்படும் தியாகராஜ சுவாமிகள் 80-வது வயதில் (1847) சித்தியடைந்தார். அவரது நினைவைப் போற்றும் வகையில், திருவையாறில் காவிரி நதிக்கரையில் அமைந்துள்ள சமாதியில் ஆண்டுதோறும் இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடி, அவருக்கு இசை அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# கோவையின் அடையாளங்கள்

## குறிச்சி அணைக்கட்டு



பண்டைய காலத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டம் ஏற்படுத்தும்போது அப்பகுதியில் முன்பு ஏற்படுத்தியுள்ள பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து அவற்றின் பாசனம் பாதுகாக்கப்பட்டுள்ளது. கோவை பேரூர் அருகே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படவே அப்பகுதியை ஆட்சி செய்த வீரராசேந்திரனிடம் மக்கள் முறையிட்டுள்ளனர். இதையடுத்து அரசன் பிறப்பித்த ஆணையாக பட்டீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச்சுவரில் உள்ள கல்வெட்டில் நீங்கள் நொய்யலாற்றில் உங்கள் ஊர் எல்லையில் தேவிசிறை என்ற பெயரில் அணை கட்டிக்கொள்ளுங்கள். ஆனால் அருகில் ஏற்கெனவே கட்டப்பட்ட கோளூர் அணைப் பாசனத்துக்கு (குறிச்சி அணைக்கட்டு) எந்த சேதமும் வராமல் அது நிறைந்த பின்தான் உங்கள் அணையில் தண்ணீர் விட்டுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொறுமைக்குக் கிடைத்த வெகுமதி

நாரதர் என்பவர் ஒரு தேவ முனிவர். மனிதர்களிடையில் பெரிய யோகிகளான முனிவர்கள் இருப்பது போன்று, தேவர்களுக் குள்ளேயும் யோகிகள் இருக்கின்றனர். நாரதர் தேவர்களில் மிகப் பெரிய யோகி. அவர் எங்கும் சஞ்சரிப்பது உண்டு. ஒரு நாள் ஒரு காட்டின் ஊடே அவர் செல்லும் போது, ஒரு முனிவரைக் கண்டார். வெகு காலம் தியானித்து நகராமல் தவம் செய்து கொண்டு இருந்ததால், அந்த முனிவரின் உடலைச் சுற்றிக் கரையான் எறும்புகள் ஒரு புற்றைக் கட்டி விட்டன. அந்த முனிவர் நாரதரை அழைத்து, "எங்கே போகிறீர்?" என்று கேட்டார். "நான் சுவர்க் கத்திற்குச் செல்கிறேன்'' என்று நாரதர் விடையளித்தார். "அப்படியானால், ஆண்டவன் எனக்கு அருள் புரிந்து எப்பொழுது முக்தி அளிப்பார் என்று தெரிந்து வர வேண்டும்" என்று வேட்டுக் கொண்டார் அவர்.

இந்த உலகத்தையே மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த கருவி கல்வி தான்.

நாரதர் சிறிது தூரம் சென்ற பின் மற்றொரு மனிதனைக் கண்டார். அவன் பாடிக் குதித்து நடன மாடிக் கொண்டு இருந்தான். அவன் நாரதரைக் கண்டு, ''நாரதரே! எங்கு செல்கிறீர்?'' என்று வினவினான். அவனது குரலும் செயலும் அவன் பைத்தியக்காரனோ என எண்ணும்படிச் செய்தது. நாரதர், "நான் சுவர்க்கத்திற்குப் போகிறேன்" என்றார். "அப்படியானால் எனக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்று கேட்டு வாருங்கள்" என்றான் அவன். நாரதர் சென்று விட்டார். சிறிது காலம் சென்ற பின்பு நாரதர் அக்காட்டின் வழியாகத் திரும்பி வந்தார். உடலைச் சுற்றிப் புற்று வளர்ந்திருந்த முனிவர், "நாரதரே! என்னைப் பற்றி பகவானிடம் கேட்டீரா?" என்றார். "ஆம்" என்றார் நாரதர். "பகவான் என்ன சென்னார்?" என்று கேட்டார் முனிவர். "நீ இன்னும் நான்கு பிறவிகளுக்குப் பின்பு முக்தி அடைவாய், என்று பகவான் கூறினார்" என்றார் நாரதர். அந்த முனிவர் அழுது, புலம்பி, ''என்னைச் சுற்றிப் புற்று மூடும் வரை பல வருடங்கள் தியானித்தேன். அப்படிச் செய்தும் இன்னும் முக்தி பெற நான்கு பிறவிகள் இருக்கின்றனவே!" என்றார்.

நாரதர் மற்ற மனிதனிடம் சென்றார். "பகவானிடம் கேட்டீரா, நாரதரே?" என்றான் அவன். "ஆம். கேட்டேன். அந்தப் புளிய மரத்தைப் பார். அதில் எத்தனை இலைகள் உள்ளனவோ அத்தனை பிறவிகளுக்குப் பின்பு உனக்கு முக்தி கிட்டும்" என்று நாரதர் கூறினார். அந்த மனிதன் மகிழ்ச்சியால், "இவ்வளவு விரைவாக எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறதே!" என்று கூறி ஆனந்த நடனம் ஆடினான். அப்பொழுது அசரீரியாக ஒரு வாக்கு கேட்கப்பட்டது. ''மகனே! இப்பொழுதே உனக்கு விடுதலையளிக்கிறேன்'', அவனது பொறுமைக்கும் விடாமுயற்சிக்கும் உடனே வெகுமதி கிட்டியது. அதை அறியப்படாமல் இன்னும் கணக்கற்றப் பிறவிகளிலும் முக்தி பெறுவதற்கு முயற்சி செய்ய அவன் சித்தமாய் இருந்ததுதான் அதற்குக் காரணம். ஆனால் முதலில் கூறப்பட்டவரோ விடுதலை பெற நான்கு பிறவிகள்கூட மிக நீண்ட காலம் என்று கருதினார். எவ்வளவு நாட்கள் வேண்டினும் காத்திருக்கத் தயாராய் இருந்த மனிதனிடம் இருந்தது போன்ற பொறுமையும், விடாமுயற்சியும் பெரும் பேற்றை அளிக்கும்.

– சுவாமி விவேகானந்தா

## தமிழ்மொழியின் சிறப்பு

பழமையான மொழி, பண்பட்ட மொழி, நம் பைந்தமிழ் மொழி, தேனினும் இனியது நம் தீந்தமிழ் மொழி தமிழ் என்றால் எளிமை. தமிழ் என்றால் அழகு. தமிழ் என்றால் அமிழ்தம். இனிமையான, எளிமையான மொழியாக விளங்குகிறது. இத்தகைய சிறப்பு பெற்ற தமிழ்மொழியை பற்றி இந்த கட்டுரையில் காண்போம்.

எத்தனையோ மொழிகள் உலகில் தோன்றியுள்ளன. கால வெள்ளத்தை கடக்க முடியாமல் எத்தனையோ மொழிகள் அழிந்துவிட்டன. உலகிலேயே பழமையான மொழிகள் எனப் பாராட்டப்படுபவை லத்தீன், கிரேக்கம், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய 6 மொழிகள் தாம். அவற்றில் லத்தீன், கிரேக்கம், எபிரேயம் இன்று இல்லை. அதேபோல் சமஸ்கிருதம் பேச்சுவழக்கில் குன்றிவிட்டது. எஞ்சியிருப்பவை இரண்டே. ஒன்று தமிழ். மற்றொன்று சீன மொழி. அதில் தமிழ் மொழி அழியாத மொழியாக, சிதையாத மொழியாக அன்று முதல் இன்று வரை ஒரே நிலையில் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இலக்கண அமைப்பில் புதுமை கண்ட பெருமை தமிழ்மொழிக்கே உண்டு. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாய் அமைத்து தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். உலகில் ஏனைய மொழிகளில் எழுத்துக்கு இலக்கணம் உண்டு. ஆனால் பொருளுக்கு இலக்கணம் வேறு எந்த மொழியிலும் இல்லை. தமிழ்மொழி ஒன்று தான், வாழ்வுக்கே இலக்கணம் அமைத்து சிறந்து மிளிரும் வளமான மொழியாகும். மானிட வாழ்க்கையை அகம், புறம், என இருவகைப்படுத்தி இலக்கணங்களை கொண்ட பெருமை தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் உண்டு.

வாழ்வுக்கே இலக்கணம் வகுத்த வண்டமிழ் மொழியில் பழந்தமிழர் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் வளமான இலக்கியங்களுக்கு குறைவில்லை. இலக்கியம் என்னும் சஞ்சீவியால் தான் தமிழ்மொழி இன்றளவும் சிரஞ்சீவியாக வாழ்த்து கொண்டிருக்கிறது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் மேல்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் போன்றவை தமிழின் பெருமையை பறைசாற்றுகின்றன. பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்யபிரபந்தங்கள் பக்தி மணம் பரப்புகின்றன. நல்வழி, மூதுரை, உலகநீதி, கொன்றைவேந்தன் போன்றன நீதிநெறிகாட்டும் வழிகாட்டிகளாய் விளங்குகின்றன.

தொல்காப்பியம், அகத்தியம், நன்னூல், தண்டியலங்காரம், யாப்பெருங்கலக்காரிகை போன்ற இலக்கண நூல்கள் தமிழ்க்கோவிலை அழியாமல் காத்து வருகின்றன.

அமிழ்தத்தை கடைந்தால் அதிலிருந்து கிடைக்கும் அரிய சொல்லை 'தமிழ்' என்று போற்றுகின்றார் நாமக்கல் கவிஞர். தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார், இங்கமரர் சிறப்புக் கண்டார் என தமிழை அமிழ்தமாக சுவைத்தார் பாரதியார்.

"தமிழுக்கு அமுதென்றுபேர் – அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று தமிழை அமிழ்தமாகவும், உயிராகவும் மதித்தார் புரட்சி கவிஞர் பாரதிதாசன்.

அமிழ்தான தமிழை அகத்தில் நினைப்போம். உயிரான தமிழை உள்ளத்தில் கொள்வோம். 'தமிழ் எங்கள் உயிர், என்ற உணர்வோடு வாழ்வோம்'. 'உயிர் இன்றேல் உடல் இல்லை, தமிழ் இல்லை என்றால் நாம் இல்லை'. எத்தனையோ இலக்கியங்களை ஈன்றெடுத்த நம் முத்தனைய உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை நாம் நெஞ்சாரப்போற்றுவோம்.

தலை குனிந்து என்னை பார் தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன் ...!!

– புத்தகம்

# டி.எஸ்.அவிநாசிலிங்கம் செட்டியார்



இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் மகாத்மா காந்தியைப் பின்பற்றி தன்னலம் கருதாமல் நாட்டுக்காக உண்மையான சேவை புரிந்த பல புண்ணிய சீலர்கள் இருந்தனர். அவர்களில் கோவையின் அவிநாசிலிங்கம் செட்டியாரும் ஒருவர் ஆவார். பெரும் செல்வக்குடும்பத்தில் பிறந்து ஏராளமான செல்வமும் புகழும் சேர்க்கும் தகுதியும் வாய்ப்பும் பெற்றவர். ஆனால் அவற்றையெல்லாம் விடுத்து நாட்டுக்கு விடுதலைக்காக காந்திய வழியில் போராடியதுடன் நாட்டின் நிர்மாணப் பணிகளையும் செய்தார். ஆன்மிகம் அரசியலோடு கல்விப்பணியும் புரிந்து இராமகிருஷ்ண வித்யாலயா, அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி என இரு பெரும் கல்விக் கோவில்களை உருவாக்கியவர். தமிழ்மொழி மீது கொண்ட பற்றினால் தமிழில் முதல் கலைக்களஞ்சியம் கண்டவர்.

திருப்பூரில் வாழ்ந்து வந்த மு.சுப்பிரமணிய செட்டியார் பழனியம்மாள் தம்பதிக்கு 05.05.1903 அன்று அவிநாசிலிங்கம் பிறந்தார். அக்காலத்தில் கூட்டுறவு இயக்கம் மற்றும் வக்கீல் தொழிலில் புகழ்பெற்று விளங்கிய டி.ஏ.இராமலிங்கம் செட்டியார் இவரின் சிறிய தந்தையார் ஆவார். அவிநாசிலிங்கம் திருப்பூரில் தொடக்கக்கல்வியும், கோவையில் உயர்நிலை கல்வியும், சென்னையில் சட்டமும் பயின்றார். அவர் கோவையில் வழக்குரைஞராக பதிவு செய்துகொண்டு தன்னுடைய சிறிய தந்தையாருடன் பணியாற்றினார்.நீ மகத்தான செயல்களைச் செய்யப் பிறந்தவன்; சொந்த நலனிலும் சாதாரண செயல்களிலும் உன் வாழ்வை நீ வீணாக்கக் கூடாது என்ற விவேகானந்தரின் சொற்கள் அவர் வாழ்வின் போக்கை மாற்றி விட்டது.

சென்னையில் கல்லூரியில் படிக்கும் போதே அவரும் அவரின் தோழர் சின்னுவும் சென்னை இராமகிருஷ்ண மடத்துக்கு அடிக்கடி செல்வதுண்டு. இருவரும் ராமகிருஷ்ணர், விவேகானந்தர் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். பொதுச் சேவை செய்ய எண்ணம் கொண்டார். அவருக்கு நெருங்கியவர்களுடன் இது குறித்து விவாதித்ததன் விளைவாக ஓர் அனாதை இல்லம் தொடங்கும் எண்ணம் அவருக்குள் உதித்தது.

1930-ம் ஆண்டு கோவையில் ரேஸ்கோர்சில் ஒரு ஓட்டுக்கட்டிடத்தில் வித்யாலயா தொடங்கப்பட்டது. ஒரே ஒரு அரிசன மாணவன் மட்டும் வித்யாலயாவில் சேர்ந்தான். இதன் காரணமாக பலரும் இந்த இல்லத்தை புறக்கணித்தனர். அதோடு இந்த கல்வி நிலையத்தை நடத்துவதற்கு தேவையான நிதியை திரட்டுவதும் கடினமாக இருந்தது. இவ்வளவு சிரமங்களுக்கு இடையே தேசத்தின் விடுதலைக்கான அழைப்பு மகாத்மா காந்தி வடிவில் வந்தது.

அவிநாசிலிங்கம் விடுதலை இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்டார். கோவை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக பணிபுரிந்தார். ரேஸ்கோர்சில் தொடங்கப்பட்ட வித்யாலயா சில மாதங்களுக்குப் பிறகு வெள்ளக்கிணறு பகுதியில் இருந்த வி.சி.வெள்ளிங்கிரி கவுண்டர் தோட்டத்துக்கு மாறியது. அதன் பிறகு இடமாற்றம் பெற்று போத்தனூரில் இயங்கியது. இங்கு தான் மகாத்மா காந்தியடிகள் 1934-ம் ஆண்டு வருகை புரிந்து புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டினார். போத்தனூரில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரிக்கவே என்ன செய்வது என்று அவிநாசிலிங்கம் யோசித்தார். அப்போது அத்திப்பாளையம் காந்தி நாயுடு என அழைக்கப்பட்ட என்.ராமகிருஷ்ண நாயுடுவும் அவர் மைத்துனர் ஆர்.ராமகிருஷ்ண நாயுடுவும் அவரை சந்தித்து பெரியநாயக்கன்பாளையத்தில் இருந்த 14 ஏக்கர் நிலத்தை வித்யாலயத்துக்கு வழங்கினர். வித்யாலயம் அங்கு மாற்றப்பட்டது அடுத்து 1935-ல் வித்யாலயா ராமகிருஷ்ண மிஷனின் ஒரு அங்கமாக மாறி அந்த நிர்வாகத்தின் கீழ் செயல்படத் தொடங்கியது.

அவிநாசிலிங்கம் உப்பு சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்று பல கொடுமைகளை அனுபவித்தார். சுதந்திர இந்தியாவில் அமைந்த முதல் சென்னை மாகாண அரசில் கல்வி அமைச்சராக அவர் செய்த சீர்திருத்தங்கள் சாதனைகளாக போற்றப்பட வேண்டியவையாகும். பள்ளிக்கல்வி வாழ்க்கைக்கான ஒன்றாகவும், சமூக உணர்வை வளர்ப்பதாகவும், குடிமைப்பயிற்சிக்கான அறிவும் பயிற்சியும் அளிப்பதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணினார். பல்கலைக் கழகங்களின் பொறுப்பில் இருந்த கல்லூரிக் கல்வி அறிவியல் பூர்வமாக இருக்கவும் வலியுறுத்தினார். அவர் காலத்தில் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தும் திட்டங்கள், நூலகச்சட்டம், வயது வந்தோர் கல்வி, தேசிய மாணவர்படை போன்றவையும் அறிமுகப்படுத்தப்பட்டன.

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரை பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து திருக்குறளை பாடமாக்குதல் பாரதியார் பாடல்களை நாட்டுடமை செய்தல், ஆங்கிலம் மற்ற பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணையாக தமிழ் மற்றும் மற்ற மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துதல், மாநில மொழிகளை பள்ளி கல்லூரிகளில் பயிற்று மொழி ஆக்குதல், இவற்றோடு தமிழில் முதல் கலைக்களஞ்சியம் உருவாக்கதல் ஆகியன அவரது முயற்சியால் நடைபெற்ற சிறப்புமிக்க திட்டங்களாகும்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்றை உருவாக்கி தமிழ் கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதியை 1954-ல் வெளிவரச் செய்தார். ஆண்டுக்கு ஒன்றாக 1963-க்குள் ஒன்பது தொகுதிகள் வெளிவந்தன. பத்தாவது தொகுதி 1968-ல் வெளி வந்தது. அதே குழுவைக் கொண்டு குழந்தைகளுக்கான ஒரு கலைக்களஞ்சியத்தையும் 1968-ல் தொடங்கி 1975 வரை வெளியிட்டார். மேலும் மகாத்மா காந்தியின் வாழ்வை நூல் வடிவில் பெரும் தொகுதிகளாக வெளிக்கொண்டு வரும் இவரின் திட்டம் ஏற்கப்பட்டு அக்குழுவுக்கு அவிநாசிலிங்கம் தலைவரானார். 12 ஆண்டுகால கடின உழைப்பால் 17 தொகுதிகளாக மகாத்மா காந்தி நூல்கள் வெளிவந்தன.

அவர் 1952-ல் நாடாளுமன்ற தேர்தலில் திருப்பூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்று உறுப்பினராக சேவை புரிந்தார். தொடர்ந்து 1958-ம் ஆண்டு முதல் 1964-ம் ஆண்டு வரை ராஜ்யசபா உறுப்பினராகவும் சேவை புரிந்தார்.

1957-ம் ஆண்டு கோவை நகரத்தில் பெண்களுக்கென்று தனியாக நாட்டிலேயே முதன் முறையாக ஒரு மனையியல் கல்லூரியைத்

நாம் வாழும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுவது தன்னிகரில்லா கல்வியே !

தொடங்கினார். அதற்கென தகுதி வாய்ந்த ஒரு தலைமையாக டாக்டர் ராஜம்மாள் தேவதாஸையும் தேர்ந்தெடுத்து நியமித்தார். அக்கல்லூரி வளர்ந்தோங்கி 1988-ல் பல்கலைக்கழகமாக மலர்ந்தது.

தனக்கென வாழாமல் பிறர்க்கென தன் வாழ்நாளெல்லாம் வாழ்ந்து நாட்டு விடுதலைக்கும் முன்னேற்றத்துக்கும் பாடுபட்ட அவரின் கல்வி இலக்கிய சேவைகளைப் பாராட்டி இந்திய அரசு அவருக்கு 1970-ம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கி பெருமைப்படுத்தியது. மேலும் ஜி.டி.பிர்லா விருது போன்ற உயரிய விருதுகளும் அவரைத் தேடி வந்தன.

தன் வாழ்நாள் முழுவதும் இந்த மாநிலம் பயனுற வாழ்ந்து தனது தியாகத்தால், சேவையால் தான் பிறந்த ஊருக்கும் நாட்டுக்கும் புகழ் சேர்த்த மாமனிதர் அவிநாசிலிங்கம் செட்டியார் 21.11.1991 அன்று காலமானார்.

## சுபாஷிதா – 1

சுபாஷிதா ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள நல்மொழிகள். நல்ல கருத்துக்கள். மிகச்சிறிய செய்யுள் வடிவத்தில் இவை இருக்கும். ஆயினும் ஆழ்ந்த அர்த்தங்களை நம் சிந்தனைக்கு ஊட்டிவிடும் வல்லமை பொருந்தியவை. இந்த மாதத்தில் தொடங்கி நாம் மாதாமாதம் ஒரு சுபாஷிதாவை கூர்ந்து கவனிப்போம்.

ஸத்யம் ப்ரூயாத் பிரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம் ப்ரியம் ச நான்ருதம் ப்ரூயாத் ஏஷ தர்ம ஸநாதனஹ இதோ முதல் சுபாஷிதா. இது ஸத்தியத்தை (உண்மையை) பற்றியது. இது கூறுகிறது, உண்மையைப்பேசு ஆனால் அது மற்றவர்களுக்கு நன்மையை பயக்க வேண்டும். அவர்கள் மனதை புண்படுத்தக் கூடாது. உண்மையைப் பேசினால் அப்படிப்பேச வேண்டும். அப்படிப்பட்ட உண்மையை பேச வேண்டும். ஒரு உண்மை மற்றவர்கள் மனதைப் புண்படுத்தும் என்றாலோ அல்லது அந்த உண்மை மற்றவர்க்கு தீமை விளைவிக்கும் என்றாலோ அப்படிப்பட்ட உண்மையை பேசாது இருப்பது நலம் என்று கூறுகிறது இந்த நல்மொழி. அதே சமயம் மற்றவர்க்கு இனிமையாய் இருக்கவேண்டும் என்பதினால் பொய்யை பேசுவது கூடாது. இது தான் நமது தொன்மையான அனாதியான தர்மமாகும். இது தான் இந்த சுபாஷிதாவின் உட்கருத்து.

ராமாயணத்தில் ஒரு முக்கியமான இடம். ஹனுமான் சீதா தேவியிடம் கூற வேண்டிய செய்திகளை தெரிவித்துவிட்டு, ஒரு பெரிய உருவம் எடுத்துக்கொண்டு அந்த அசோக வனத்தினை அழிக்க முற்படுகிறார். இதைக்கண்ட ராக்ஷஸிகள் பயந்து சீதையிடம் ஓடி வந்து, யார் இந்த வானரம்? தங்களிடம் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டோமே என்று வினவுகிறார்கள். சீதா தேவி உண்மையையே பேசவேண்டும் என்ற காரணத்தைக் கொண்டு ஹனுமனை ராம தூதன் என்று வெளிப்படுத்தினால் அதனால் ஹநுமானுக்கு ஆபத்து வரும் என்று அஞ்சி இந்த வானரனை தனக்கு தெரியாது என்று கூறுகிறார். இதை தான் இந்த சுபாஷிதா ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம் (உண்மை மற்றவர்க்கு தீமை விளைவிக்கும் என்றால் அப்படிப்பட்ட உண்மையை பேசாது இருப்பது நலம்) என்று நமக்கு அறிவுறுத்துகிறது. (சுந்தரகாண்டம் 5-42-10)

ராமர் உண்மையையே பேசுபவர். வசிஷ்டர் முன்னிலையில், மற்ற ரிஷிகளின் முன்னிலையில், தன் தாயார்கள் முன்னிலையில் அந்த ராமர் கம்பீரமாக ஸத்யம் ஏவ ஈஸ்வரோ லோகே என்று பறை சாற்றுகிறார். ஸத்யம் என்பதினை ஒரு குணம் என்பதிலிருந்து பலமடங்கு மேலே கொண்டு சென்று ஸத்யத்தினையே இந்த உலகிற்கு தலைவனாக நிறுத்துகிறார். வால்மீகி மகரிஷி அவரை 'ஸத்ய பராக்ரமஹ என்று கொண்டாடுகிறார். அப்படிப்பட்ட, உண்மையை கடைபிடிப்பதையே தன் கொள்கையாகக் கொண்ட, அந்த ராமரும் தான் பேசும் உண்மையினால் எவருக்கும் தீமை நடவாதபடி தான் பார்த்துக் கொள்வார் என்று ராமாயணம் நமக்கு தெரிவிக்கிறது. அயோத்யா காண்டத்தில் ராமருடைய நற்குணங்களை எடுத்துரைக்கும்பொழுது ராமாயணம் புத்திமான் மதுராபாஷி பூர்வபாஷி ப்ரியம்வதஹ என்று ராமரைப் பற்றி புகழ்கிறது. அறிவு மிக்கவர், தேனைப்போல் பேசிக் கூடியவர், மற்றவர் பேசுவதற்கு தயங்கினும் தானே முன் சென்று பேசுபவர், மற்றவர் மனது சந்தோஷப்படும்படி உண்மையை பேசுபவர் என்று பொருள் இதற்கு. இந்த ராமாயண ஸ்லோகம் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் சுபாஷிதாவின் உட்கருத்தை பிரமாதமாக பிரதிபலிக்கிறது. (அயோத்யா காண்டம் 2-1-13). மறுபடியும் ஒருமுறை இந்த சுபாஷிதாவின் அறிவுரையை நம் மனதினில் பதிந்து கொள்வோம்:

உண்மையைப்பேசு ஆனால் அது மற்றவர்களுக்கு நன்மையை பயக்க வேண்டும். அவர்கள் மனதை புண்படுத்தக் கூடாது. உண்மையைப் பேசினால் அப்படிப்பேச வேண்டும். அப்படிப்பட்ட உண்மையை பேச வேண்டும். ஒரு உண்மை மற்றவர்கள் மனதைப் புண்படுத்தும் என்றாலோ அல்லது அந்த உண்மை மற்றவர்க்கு தீமை விளைவிக்கும் என்றாலோ அப்படிப்பட்ட உண்மையை பேசாது இருப்பது நலம். அறத்தான் வருவதே இன்பம்

வெ. பிரபாகர் ராவ்,
Hon. Registrar, BVB, Cbe

Book-Post

To

We welcome suggestions and contributions from the readers for improving the quality and content of the bulletin.